2006 செப்டம்பர் 2]

3. தன்னிலை விளக்கம்

முதலமைச்சர் அளித்த விருந்தில்–மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கலந்துகொண்டது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்த வேண்டும். (குறுக்கீடு) செல்வி கே. பாலபாரதி.

பிற்பகல் 12–05

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்கள், நமது உறுப்பினர்களுக்கு, ஒரு விருந்திற்காக அழைப்புக் கொடுத்தார்கள். இந்த அழைப்பை அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டார்கள். மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும் ஏற்றுக்கொண்டது. அப்படி அழைப்பதும், ஏற்றுக்கொள்வதும் மரபு. மரபை மதிப்பதுதான் மரியாதை.

மேலும், தமிழகத்தினுடைய அரசாங்கம் ஏழைகளுக்கு இரண்டு ரூபாய்க்கு, ஒரு கிலோ அரிசி வழங்குவது, 7,000 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்வது, பெண்களுக்கும், ஆண்களுக்கும், ஆண்தான் வாரிசு என்று காலங்காலமாக இருந்த ஒரு சட்டத்தை, விதியை உடைத்தெறிந்து, ஒரு நேர உணவுக்குக்கூட வழியில்லாத பெண்களுக்கு உதவித் தொகையைப் பெறுவதில், ஆண் வாரிசு இருந்தாலும் அவர்களுக்கும் தருவோம் என்று சொன்னது ஆகிய இந்த நல்ல திட்டங்களை ஏற்றுக்கொண்டு, நன்றி தெரிவிக்கக்கூடிய வகையிலேதான், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள் எல்லோரும் அந்த விருந்திலே கலந்துகொண்டோம்.

ஏனோ தெரியவில்லை; மார்க்சிஸ்ட்களை மட்டும் பார்த்து, “இவ்வாறு விருந்திலே கலந்துகொண்டவர்கள், சந்தர்ப்பவாதிகள்” என்று சொன்ன விமர்சனத்திற்கு நாங்கள் உள்ளாகியிருக்கிறோம். இதிலே நடந்த உண்மை என்னவென்றால், கடந்த 2001–லே, கடந்த அ.தி.மு.க. அரசாங்கம் ஓர் அரசு விருந்து கொடுத்தது, Taj Hotel–லில். அப்பொழுது மறைந்த தலைவர் திரு. மூப்பனார் அவர்களும் அதிலே கலந்து கொண்டார்கள். எல்லோரும் கலந்துகொண்டோம்.

மீண்டும் 2003 ஆம் ஆண்டு கடுமையான வறட்சி நிலவிய நேரத்தில், அப்பொழுது ஓர் அரசு விருந்துக்கு ஏற்பாடு செய்தபொழுதுதான், எங்களுடைய அருமை தோழர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள்,

[செல்வி கே. பாலபாரதி] [2006 செப்டம்பர் 2

"கடுமையான வறட்சி நிலவுகிறது; திருவாரூர், நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்களில், பட்டினிச் சாவு நிகழ்ந்துகொண்டிருக்கிறது; இந்த நேரத்திலே வேண்டாம்" என்று தமது கருத்தைச் சொன்னார்கள். அதை ஏற்று, அப்பொழுது அ.தி.மு.க. அரசாங்கம் அந்த விருந்தை இரத்து செய்துவிட்டது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சொல்லி முடிக்கட்டும்.

செல்வி கே. பாலபாரதி: ஆகவே, அரசே அன்று இரத்து செய்த விருந்தில், கம்யூனிஸ்ட்கள் கலந்துகொள்ளவில்லை, அது சந்தர்ப்பவாதம் என்று சொல்வது, எந்தவகையிலே பொருத்தமாக இருக்கும் என்பதனையும்

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்று ஒரு குறள் சொல்வார்கள்; அதனையும் இந்த நேரத்தில், இந்த மன்றத்திலே பதிவு செய்துகொள்கிறேன்.

அதுபோன்று, நமது முதலமைச்சர் வீட்டுப் பெண்களை, அரசியலுக்குச் சம்பந்தமில்லாதவர்களை இழிவுபடுத்தியிருந்தாலும், நீங்கள், இரண்டு ஏக்கர் தரிசு நிலம் இப்பொழுது கொடுக்க இருக்கிறீர்கள். அந்தத் தரிசு நிலங்கள் ஆண்களுக்கு மட்டும்தான் கிடைக்குமா என்று பெண்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், நாங்கள் செல்லக்கூடிய இடத்திலே. ஆகவே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் அந்தப் பட்டாவை, தரிசு நிலத்திற்குரிய உரிமையை, கணவர், மனைவி இருவருடைய பெயரிலே கூட்டுப் பட்டாவாக வழங்கினால், அது பெண்களுக்கும் சென்று சேரும். தமிழகப் பெண்கள் நிச்சயமாக வாழ்த்துவார்கள் என்றவகையிலே, அந்தக் கருத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, இந்த நேரத்திலே மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சமர்ப்பித்துக்கொள்கின்றேன்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இல்லை, இதை முடித்துவிடுகிறேன். அதாவது, திரு. செங்கோட்டையன், நீங்கள் கொறடா என்கிறவகையில் ஒரு தடவை அல்லது இரண்டு தடவை எழுந்திருக்கலாம். இதே வேலையாகப் போனால், அவையை நடத்த முடியாது.